செ. கு. எண்: 243 நாள்:03.11.2020

# மாண்புமிகு தமிழக முதலமைச்சர் திரு. எடப்பாடி K.பழனிசாமி அவர்களின் இரங்கல் செய்தி – 3.11.2020

மக்களை தனது கர்நாடக இசையால் கவர்ந்த பிரபல இசைக் கலைஞர் திரு. டி.என். கிருஷ்ணா அவர்கள் உடல்நலக் குறைவு காரணமாக நேற்று (2.11.2020) காலமானார் என்ற செய்தி அறிந்து மிகுந்த வேதனை அடைந்தேன்.

அன்பும், அடக்கமும், எளிமையும், இறைப் பற்றும் மிகுந்த திரு. டி.என் கிருஷ்ணா அவர்களின் இசைப் பயணம் அவரது சிறு வயதிலேயே ஆரம்பித்து விட்டது. கர்நாடக இசையில், குறிப்பாக வயலின் இசையில் இவர் நாட்டம் கொண்டு, இசைத் துறையில் சாதனைகள் பல புரிந்தவர்.

திரு.டி.என். கிருஷ்ணா அவர்கள் சென்னை இசைக் கல்லூரியின் பேராசிரியர், டெல்லி பல்கலைக் கழகத்தின் இசை மற்றும் கவின் பள்ளியின் முதல்வர் என பல முக்கிய பதவிகளில் திறம்பட பணியாற்றியவர் என்ற சிறப்புக்குரியவர். மத்திய அரசின் உயரிய விருதான பத்ம பூஷன், பத்ம ஸ்ரீ மற்றும் சங்கீத நாடக அகாடமி விருது உள்ளிட்ட பல்வேறு விருதுகளுக்கு சொந்தக்காரர்.

திரு. டி.என். கிருஷ்ணா அவர்களின் இடத்தை இனி எவராலும் நிரப்ப முடியாது. அவர் மறைந்தாலும், அவரது வயலின் இசை என்றும் நம் செவிகளில் ஒலித்துக் கொண்டே இருக்கும்.

திரு. டி. என். கிருஷ்ணா அவர்களின் மறைவு இசைத் துறைக்கும், கலை உலகிற்கும் பேரிழப்பாகும். அன்னாரை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கும், இசை உலக நண்பர்களுக்கும், ரசிக பெருமக்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்வதுடன், அவரது ஆன்மா இறைவனின் திருவடி நிழலில் இளைப்பாற எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கிறேன்.

**K.பழனிசாமி**
தமிழ்நாடு முதலமைச்சர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**